இளையோர் அரங்கம் - விநாடி வினாப் போட்டி

போட்டிக்கான வினா-விடை

**1. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித்
துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை.
**வினா:** மழையின் முக்கியத்துவம் என்ன?
**விடை:** நாம் உண்ணும் உணவின் உற்பத்திக்கு அத்தியாவசியமானது. ✅

**2. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.
**வினா:** உலகில் ஒழுக்கம் நிலைத்திருக்க அடிப்படையானது எது?
**விடை:** வானத்தில் இருந்து பொழியும் மழை ✅

**3. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.
**வினா:** அறத்தை கடைப்பிடிக்கத் தவிர்க்க வேண்டிய குற்றங்கள் எவை?
**விடை:** பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ✅

**4. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.
**வினா:** உண்மையான இன்பத்தை தருவது எது?
**விடை:** அறம் ✅

**5. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.
**வினா:** எதன் ஒலி குழல் இசைக்கும் மேல் இனிமையானது?
**விடை:** குழந்தையின் சொல் ✅

**6. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.
**வினா:** அன்புடையவர்கள் எப்படி வாழ்கிறார்கள்?
**விடை:** பிறர்க்கென்று ✅

**7. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.
**வினா:** அன்பில்லாதவனை அறம் வருத்துவது எதைப் போன்றது?
**விடை:** புழுவை வெயில் வருத்துவது போன்றது ✅

**8. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.
**வினா:** உயிருள்ள உடம்பைக் கொண்டவர் யார்?
**விடை:** அன்புள்ளோர் ✅

**9. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.
**வினா:** ஒருவருக்கு உண்மையான அணிகள் எவை?
**விடை:** பணிவு, இன்சொல் ✅

**10. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.
**வினா:** கனிவாக பேசாமல் கடுமையாக பேசுவது எதனை ஒத்தது?
**விடை:** பழங்கள் இருக்க, காய்களைப் பறிப்பதற்கு ✅

**11. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.
**வினா:** நன்றியை மறப்பது எத்தகையது?
**விடை:** தவறானது ✅

**12. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.
**வினா:** பல நூல்கள் படித்தாலும் என்ன இல்லை என்றால் அறிவில்லையெனப்படுவர்?
**விடை:** உலகத்தோடு ஒத்து நடத்தல் ✅

**13. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.
**வினா:** தவத்தை விட எது உயர்ந்ததாக கூறப்படுகின்றது?
**விடை:** கடுஞ்சொல்லைப் பொறுத்துக்கொள்வது ✅

**14. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.
**வினா:** நாம் பேசும் சொற்கள் எப்படி இருக்க வேண்டும்?
**விடை:** பயனுள்ளதாக ✅

**15. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.
**வினா:** உண்மையான ஈகை யாருக்குக் கொடுத்தல் ஆகும்?
**விடை:** வறியவருக்கு ✅

**16. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.
**வினா:** உயிருக்கு உண்மையான ஊதியம் எது?
**விடை:** ஈதல் ✅

**17. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.
**வினா:** அருளற்றவர்களுக்கு என்ன இல்லை?
**விடை:** இறப்பின் பின் வானுலகம் இல்லை ✅

**18. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.
**வினா:** வாய்மை என்றால் என்ன?
**விடை:** தீமை இல்லாததைச் சொல்வது ✅

**19. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.
**வினா:** சான்றோருக்கு உண்மையான விளக்கு எது?
**விடை:** பொய்யாமை ✅

**20. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்?
**வினா:** எப்போது சினம் கட்டுப்படுத்த வேண்டும்?
**விடை:** சினம் காட்டக்கூடிய இடத்தில் ✅

**21. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.
**வினா:** கோபத்திற்கு அடிமையானவர்கள் யாருடன் ஒப்பிடப்படுகின்றனர்?
**விடை:** இறந்தவர்கள் ✅

**22. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.
**வினா:** தீமை செய்தவரை தண்டிப்பது எவ்வாறு?
**விடை:** அவர் வெட்கும் படியாக அவர்களுக்கு நன்மை செய்வது ✅

**23. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.
**வினா:** அறிவுடையவர் எதைப் போல் பிறர் துன்பத்தை எண்ண வேண்டும்?
**விடை:** தம் துன்பம் போல் ✅

**24. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்.
**வினா:** தீமை செய்தால் என்ன நேரிடும்?
**விடை:** அது செய்தவரையே தீமையாக வந்தடையும் ✅

**25. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.
**வினா:** நூல்களில் தொகுத்துச் சொல்லப்படும் அறங்களிலெல்லாம் சிறந்தது எது?
**விடை:** பசித்தவர்க்கு உணவு அளித்தால் ✅

**26. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
கூத்தாட்டு அவைக் குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.
**வினா:** செல்வம் எதுபோல் வந்து போகும்?
**விடை:** கூத்து ஆடுமிடத்திற்கு வரும் கூட்டம்போல ✅

**27. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.
**வினா:** இந்த உலகத்தின் தன்மை என்ன?
**விடை:** நிலையற்ற வாழ்வு ✅

**28. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.
**வினா:** அறிவுடையவர் எதை எப்போதும் முனைந்து நோக்குவர்?
**விடை:** உண்மைத் தன்மையை ✅

**29. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.
**வினா:** மக்களை நல்ல முறையில் காக்கும் அரசர் எதற்கு ஒப்பானவர்?
**விடை:** இறைவனுக்கு ✅

**30. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.
**வினா:** கல்வியின் நோக்கம் என்ன?
**விடை:** ஐயமறக் கற்கவேண்டும்; கற்றதைப் பயன்படுத்தி நடக்கவேண்டும் ✅

**31. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.
**வினா:** கண்ணிருந்தும் பார்வை இல்லாதவர் என்று கூறப்படுவோர் யார்?
**விடை:** கல்லாதவர்கள் ✅

**32. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.
**வினா:** அறிவு எப்படி வளர்கின்றது?
**விடை:** தோண்டத் தோண்ட மேலும் மேலும் நீர் ஊறும் ஆற்றங்கரை மணற் கிணறு போல் படிக்கப் படிக்க அறிவு வளர்கின்றது ✅

**33. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.
**வினா:** அழிக்க முடியாத உயர்ந்த செல்வம் எது?
**விடை:** கல்வி ✅

**34. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.
**வினா:** அனைத்து செல்வங்களில் சிறந்தது எது?
**விடை:** மற்றவர்களிடம் கேட்டு அறிகின்ற அறிவாகிய செவிச்செல்வம் ✅

**35. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை.
**வினா:** படிக்க முடியாவிட்டால் என்ன செய்யவேண்டும்?
**விடை:** கற்றவர்களிடம் கேட்டு அறிய வேண்டும் ✅

**36. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது.
**வினா:** பணிவான பேச்சு உடையவர் யார்?
**விடை:** பிறர் சொல்வதைச் கேட்டு அறியும் நுண்ணிய கேள்வியறிவு உள்ளவர்கள் ✅

**37. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.
**வினா:** எல்லா செல்வமும் யாரிடம் உள்ளது?
**விடை:** அறிவுள்ளவர்களிடம் ✅

**38. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு?
**வினா:** முதலில் யார் குற்றத்தை சரிசெய்ய வேண்டும்?
**விடை:** தன் குற்றத்தை ✅

**39. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
ஆற்றின் அறவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி.
**வினா:** எப்படி தானம் செய்ய வேண்டும்?
**விடை:** தன்னால் கொடுக்கக்கூடிய அளவையும், பெறுபவருக்குத் தேவையான அளவையும் அறிந்து ✅

**40. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.
**வினா:** ஒரு பணியை ஒருவரிடம் ஒப்படைக்கும் முன் என்ன செய்ய வேண்டும்?
**விடை:** இவரால் இப்பணியைச் சரியாகச் செய்து முடிக்க முடியுமா என்று ஆராய்ந்து கொடுக்க வேண்டும் ✅

**41. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.
**வினா:** கொடியரை ஒழிக்க வேந்தன் செய்ய வேண்டியது?
**விடை:** நீதி விசாரணையினால் தண்டித்து ஒடுக்க வேண்டும் ✅

**42. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெருஉம் புலிதாக் குறின்.
**வினா:** பெரிய யானை எதற்குப் பயப்படும்?
**விடை:** சிறிய புலியின் தாக்குதலுக்கு ✅

**43. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில்.
**வினா:** துன்பம் வரும்போது என்ன செய்ய வேண்டும்?
**விடை:** இதற்கு அடுத்து வருவது துன்பமாய் இருக்காது என்ற நம்பிக்கையோடு சிரித்த முகத்துடன் இருக்கவேண்டும் ✅

**44. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.
**வினா:** சொல்ல வேண்டியதைத் துணிவாகச் சொல்வதால் என்ன பயன்?
**விடை:** மற்றவர்களால் அவரை வெல்ல முடியாது? ✅

**45. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.
**வினா:** சொல்வதிலும் கடினமானது எது?
**விடை:** சொல்லியபடி செய்வது ✅

**46. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு.
**வினா:** கைம்மாறு எதிர்பார்க்காது உதவி செய்பவர்கள் எதற்கு ஒப்பானவர்கள்?
**விடை:** எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் உலகிற்கு நீர் வழங்கும் மழைக்கு ✅

**47. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.
**வினா:** அரசருக்கு சிறப்புச் சேர்க்கும் ஆறும் எவை?
**விடை:** சிறந்த படை, நற்குடிகள், குறையாத செல்வம், நல்லமைச்சர், நட்பு, அழிக்கமுடியாத அரண்

**48. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.
**வினா:** தூதுவனின் பண்புகளாகக் கூறப்படுவன எவை?
**விடை:** தூய ஒழுக்கம், துணை, துணிவு

**49. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து
**வினா:** உழவர்கள் எத்தகையவர் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்?
**விடை:** உலகத்தார்க்கு அச்சாணி போன்றது

**50. தேர்ந்தெடுக்கப்பட்ட குறள்:**
அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்
**வினா:** கூர்மையான அறிவுடையவராயினும் மரம் போன்றவர் யார்?
**விடை:** மனிதப்பண்பு இல்லாதவர்

* போட்டியின் பொழுது வினாவுக்கான திருக்குறள் தரப்படாமல் இருக்கலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.